கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ஆணை.
**முன்னிலை: திரு. எஸ். பாஸ்கரன்,பி.எஸ்ஸி.,**

ந.க.**2821/2020/அ2** நாள்: 02.**11.2010.**

பொருள்:பொதுப் பணிகள் - கருவூலக் கணக்குத் துறை – ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளுக்கான தேர்வு IV - 2018-2019,2019-2020, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணயத்தால் ஏற்பளிக்கப்பட்டோர் - கருவூலக் கணக்கு துறையில் திருவள்ளூர் மாவட்டக் கருவூல அலகில் பணிநியமனம் வழங்கி ஒதுக்கீடு செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் (Regularization) - குறித்து.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை 35 கடித எண்.2505/PSD-1/2020, நாள் : 30.05.2020.
2. முதன்மைச் செயலர்/ஆணையர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை – 35 அவர்களின் செ.மு.ந.க.18541/2020/சி3 நாள் 31.07.2020.
3. கருவூல அலுவலர், திருவள்ளூர், அவர்களின் செ.மு.ந.க. 2821/2020/அ2/ நாள் : 05.08.2020.

--------

**ஆணை:**

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதி எண். 23(a) இன்படி, பார்வை 2ல் குறிப்பிட்ட ஆணையில் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளுக்கான தேர்வு IV - 2018-2019,2019-2020, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணயத்தால் ஏற்பளிக்கப்பட்டு திருவள்ளூர் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்காணும் பணியாளர்களின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர்களுக்கெதிரே குறிப்பிட்ட பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணைப் பிறப்பிக்கலாகிறது.

| வ. எண் | பதிவு எண் | பெயர்/பதவி | பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1. | 2703020292 | செல்வி. ஷ.தாரணி<br>இளநிலை உதவியாளர் | மாவட்டக் கருவூலம்,<br>திருவள்ளூர் | 05.08.2020<br>முற்பகல் முதல் |
| 2. | 211008052 | திரு கு.அருண்குமார்,<br>இளநிலை உதவியாளர் | மாவட்டக் கருவூலம்,<br>திருவள்ளூர் | 05.08.2020<br>முற்பகல் முதல் |

2. மேற்கண்ட பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகளுக்கான தேர்வு - IV 2018-2019,2019-2020, தெரிவு சம்மந்தமான வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டது எனவும் ஆணையிடலாகிறது.

**"The regularization is subject to the outcome of the WPs pending of the files of the Madras / Madurai Bench of the Hon'ble High Court, Madras relating to the recruitment to the post included in CCSE-IV for the year 2018-2019,2019-2020, recruitment."**

3. மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் பணிவரன்முறைப்படுத்திய நாளிலிருந்து மூன்றாண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்திலிருத்தியும் ஆணையிடலாகிறது. மேலும் தகுதிகாண் காலத்திற்குள் கணக்கு தேர்வு பாகம் I, கணக்கு தேர்வு பாகம் II மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2.11.2020

கருவூல அலுவலர்,
திருவள்ளூர்.

**பெறுநர்:** சம்மந்தப்பட்ட பணியாளர்கள்.

2/11/2020